இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 06-03-2024

# எந்தத் திட்டத்துக்கு தடை போட்டோம்?- 3

**5. ஜி.எஸ்.டி. இழப்பீடு**

சரக்கு மற்றும் சேவை வரியை அமல்படுத்திய பிறகு மாநிலங்களுக்கு கிடைக்க வேண்டிய வரி வருவாய் மிகப்பெரிய அளவில் குறைந்துவிட்டது. மாநிலங்கள் வசூலித்துக் கொள்ள வேண்டிய வரியை ஒன்றிய அரசு எடுத்துச் சென்று விடுகிறது. இதனால் ஏற்படும் இழப்பை ஈடு கட்ட இழப்பீடு பணம் தருவதாகச் சொன்னார்கள். அது ஒரு ஆசை வார்த்தைதான். அந்த இழப்பீடும் 2022 ஆம் ஆண்டோடு நின்று விட்டது. நிறுத்தப்பட்டு விட்டது. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அமலுக்கு முந்தைய காலகட்டத்தை ஒப்பிடுகையில், ஆண்டொன்றுக்கு 20,000 கோடி ரூபாய் வருவாய்ப் பற்றாக்குறையை தமிழ்நாடு அரசு எதிர்கொண்டு வருகிறது .

**6. கடன் வாங்குவதில் முட்டுக்கட்டை**

மாநிலங்கள் கடன் வாங்குவதில் கூட தடையை ஏற்படுத்துகிறார்கள். மாநிலங்களின் பொதுச் செலவினங்களுக்கு நிதியளிப்பதற்கான பொதுக்கடன் என்பது, இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி, மாநில சட்டமன்றத்தின் தனிப்பட்ட அதிகார வரம்பிற்கு உட்பட்டது ஆகும். ஆனால் மாநிலங்கள் கடன் வாங்குவதற்கான வாய்ப்புகளைக் கட்டுப்படுத்த, இந்திய அரசமைப்பின் 293-வது பிரிவின் கீழ் தனக்குள்ள அதிகாரத்தை ஒன்றிய அரசு தவறாகப் பயன்படுத்தி வருகிறது. இந்தப் பிரிவின்படி, மாநிலங்கள் கடன் வாங்க ஒன்றிய அரசிடம் முன் அனுமதி பெற வேண்டும் என்ற ஷரத்து மாநில சுயாட்சிக்கு எதிரானது ஆகும். மாநில அரசின் நிதிப் பொறுப்பைத் தடுப்பது ஆகும். வரையறுக்கப்பட்ட நிதிப் பற்றாக்குறையை நேர் செய்யும் மாநில அரசின் முனைப்புகளை தடுக்கும் செயல் ஆகும்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாடு தொடர்ந்து 15 விழுக்காடு வளர்ச்சியை அடைந்த போதிலும், 2023-2024 ஆம் ஆண்டில் நிகரக் கடன் உச்சவரம்பைக் கணக்கிடுவதற்கான மாநில மொத்த உற்பத்தி வளர்ச்சியை வெறும் 8 விழுக்காடாக ஒன்றிய அரசு நிர்ணயித்துள்ளது. இதனால், நடப்பாண்டில், 6,000 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

**7. சொன்னதை நிறைவேற்றினாரா?**

**2014 ஆம் ஆண்டு ஏப்ரல் 17 ஆம் நாள் ராமநாதபுரத்துக்கு வந்து நரேந்திரமோடி அவர்கள் பேசினார்கள். அவர் அப்போது பிரதமர் ஆக வில்லை. வாக்குக்கேட்டு வந்து பேசும் போது என்ன சொன்னார்? " மிகப் பெரிய புண்ணிய ஸ்தலமான ராமேஸ்வரம், சுற்றுலாத் தலமாக மாற்றப் பட்டு உலகத்தினர் அனைவரும் வந்து செல்ல ஏற்பாடு செய்யப்படும்" - என்று சொன்னார் நரேந்திர மோடி. இதற்காக என்ன பணிகள் செய்யப்பட்டன?**

**ராமேஸ்வரத்தை உலகப் புகழ் பெற்ற சுற்றுலா தலமாக மாற்றி விட்டார்களா?**

**ராமேஸ்வரத்திற்கு அருகில் உள்ள தனுஷ்கோடி, 1964-ல் வீசிய புயல் மற்றும் கடல் கொந்தளிப்பால் அழிந்து போனது. ராமேஸ்வரம் தாண்டி தனுஷ்கோடி வரை ரயில்கள் முன்பு வந்து சென்றன. புயலால் தனுஷ்கோடி அழிந்த போது ரயில் பாதைகளும் காணாமல் போனது. தனுஷ்கோடி வரை மீண்டும் பாதை அமைத்து ரெயில் போக்குவரத்து தொடங்குவதற்காக 2019 மார்ச் 1-ம் தேதி பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார். ராமேஸ்வரம் - தனுஷ் கோடி இடையே 17 கிலோ மீட்டர் தூர புதிய ரயில் பாதை இன்னும் வரவில்லை.**

**ஜவுளிகளின் சொர்க்கமான ஈரோட்டில் ஜவுளித் தொழிலுக்கான உள்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படும். ஈரோட்டில் பொது சுத்திகரிப்பு நிலையம் அமைக்க உறுதியான நடவடிக்கை எடுப்போம் - என்று ஈரோட்டில் பேசினார் மோடி. செய்து தரவில்லை.**

**பொது சுத்திகரிப்பு நிலையம் அமைக்க ரூ.920 கோடி ஒதுக்கீடு செய்து அடிக்கல் நாட்டு விழா கடந்த 2021 இல் காணொலி வாயிலாக நடைபெற்றது. பட்டறை உரிமையாளர்கள் அளித்த பங்களிப்புத் தொகையை கொண்டு காவிரி ஆற்றின் வலது புறம் பவானியில் இரண்டு இடத்திலும், ஈரோடு வைராபாளையத்திலும், காவிரி ஆற்றின் இடதுபுறம் உள்ள நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம், பள்ளிபாளையம் ஆகிய இரண்டு இடம் என ஐந்து இடங்களில் பொது சுத்திகரிப்பு நிலையம் கட்ட இடம் விலைக்கு வாங்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகி விட்டன. எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ரூ.920 கோடி என்ன ஆனது என்று துணி உற்பத்தியாளர்கள் கேட்கிறார்கள்.**

**"ஈரோடு மஞ்சளை இந்தியாவே நேசிக்கிறது. ஈரோடு விவசாயிகளுக்கு இந்தியாவே நன்றிக் கடன் பட்டுள்ளது. பி.ஜே.பி. ஆட்சிக்கு வந்தால் மஞ்சளை ஆயுர்வேதம் மட்டுமின்றி, அழகு சாதனப் பொருளாகவும் மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்" - என்று ஈரோட்டில் பேசினார் மோடி. மஞ்சளில் இருந்து தயாரிக்க ஆயுர்வேத ஆலை, அழகு சாதனப் பொருட்களுக்கு பயன்படுத்தும் திட்டம், மருந்து மற்றும் பெயிண்ட் போன்றவை தயார் செய்யும் திட்டம் என இதுவரை எந்த திட்டமும் ஒன்றிய அரசு செய்யவில்லை.**

**மோடி அவர்கள் கொடுத்த முக்கியமான வாக்குறுதி மீனவர்களைப் பற்றியது ஆகும். "தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் துன்புறுத்தப்படுவதும் - கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவதும் தினசரி நடந்து வருகிறது. இதற்கு காங்கிரஸ் அரசின் பலவீனம்தான் காரணம்" - என்று இதே ராமநாதபுரத்தில் வைத்துத்தான் சொன்னார் மோடி. மீனவர்கள் பாதுகாப்பாக வாழ வேண்டுமானால் இந்தியாவில் வலுவான அரசு அமைய வேண்டும். மீனவர்கள் வாழ்வு சிறக்க நான் ஒரு சபதம் எடுக்கிறேன் என்று கன்னியாகுமரியில் 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் 17 ஆம் தேதி பேசினார் மோடி. அவரது சபதத்தை நிறைவேற்றி விட்டாரா?**

**""நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஒரு மீனவர் கூட உயிரிழக்க மாட்டார். தமிழ்நாட்டு மீனவர்க்கு இலங்கையால் பிரச்சினை. குஜராத் மீனவர்க்கு பாகிஸ்தானால் பிரச்சினை. இரண்டு மாநில மீனவர்களையும் இணைத்து பேசி கூட்டு நடவடிக்கை எடுப்போம்" என்று சொன்னார் நரேந்திர மோடி அவர்கள். 2014 முதல் தமிழ்நாட்டு மீனவர்கள் மீது சிங்களக் கடற்படை தாக்குதல் நடத்தவில்லையா? அவர் ஆண்ட பத்தாண்டு காலத்தில் இலங்கைக் கடற்படையினரால் 3 ஆயிரத்து 76 மீனவர்கள் கைது செய்யப்பட்டார்கள். அவர்களின் 534 படகுகள் சிங்கள அரசாங்கத்தால் கடத்தப்பட்டுள்ளன.**

இப்படி கொடுத்த எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை மோடி. எந்த திட்டமும் கொண்டு வரவில்லை. ஆனால் வாயால் வடை மட்டும் விதவிதமாக சுட்டுக் கொண்டு இருக்கிறார்.

●●



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (5.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், சமத்துவ மக்கள் கழகத்தின் நிறுவனத் தலைவர் எர்ணாவூர் ஏ. நாராயணன் சந்தித்து, 2024 நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளுக்கு சமத்துவ மக்கள் கழகத்தின் ஆதரவினை தெரிவித்தார். உடன் கழக பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், பொருளாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு ஆகியோர் உள்ளனர்.

### உயர்நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாக்கிட முதல்வர் முயற்சி மேற்கொண்டு வருகிறார்!

# வழக்கறிஞர்கள் உண்ணாவிரதத்தை கைவிடவேண்டும்!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி வேண்டுகோள்!

சென்னை, மார்ச் 6 - சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்காடு மொழியாக தமிழ் மொழியை நடைமுறைபடுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும். எனவே இது தொடர்பாக உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும் வழக்கறிஞர்கள் தங்கள் உண்ணாவிரதத்தை கைவிடக்கோரி கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.



இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றான "எங்கும் தமிழ், எதிலும் தமிழ்" என்ற நிலைப்பாட்டின் அடிப்படையில், தமிழகத்தில் உள்ள சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்காடு மொழியாக தமிழ்மொழியை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

இதுகுறித்து முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்கள், ஒன்றிய அரசுக்கு பல கடிதங்கள் எழுதியுள்ளார்.

மேலும் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி அவர்கள் முன்னிலையிலேயே தமிழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டபோது, முதலமைச்சர், மு.க.ஸ்டாலின் அவர்கள் தன்னுடைய உரையிலேயே 'தமிழை வழக்காடு மொழியாக நடைமுறைப்படுத்த வேண்டும்' என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

*2009, 2014, 2019* ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல்களின்போது, தி.மு.கழகம் வெளியிட்ட தேர்தல் அறிக்கையிலும், இக்கோரிக்கை வலியுறுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக கடந்த 2019 நாடாளுமன்றத் தேர்தலின் போது, தி.மு.கழகம் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் 16வது பக்கத்தில் "4.உயர்நீதி மன்ற வழக்காடு மொழியாக தமிழ்" என்ற தலைப்பில் "இந்தி அல்லது மாநில மொழிகள் உயர்நீதி மன்றங்களின் தீர்ப்புகளிலும் ஆணைகளிலும் பயன்படுத்தப்படலாம்" என அலுவலக மொழிகள் சட்டம், 1963 பிரிவு 7ல் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

மேலும், இது தொடர்பாக மாநில சட்டப் பேரவை தீர்மானம் இயற்றி, அது குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டால். குடியரசுத் தலைவர் அந்த தீர்மானத்தை ஏற்று உரிய ஆணை பிறப்பிக்க வேண்டும் எனவும் மத்திய அலுவலக மொழிச் சட்டம் தெளிவாகக் கூறியுள்ளது.

இதற்கேற்ப, தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த நேரத்தில் தமிழை நீதிமன்ற மொழியாக்கிட வேண்டும் என்ற தீர்மானத்தை 6.12.2006 அன்று தமிழ்நாடு சட்டப் பேரவை நிறைவேற்றியது. தொடர்ந்து, ஆளுநரின் பரிந்துரையுடன் இத்தீர்மானம் 11.2.2007 அன்று ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. எனினும், இதுகாறும், ஒன்றிய அரசு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாததால், தமிழை நீதிமன்ற மொழியாக ஆக்கிடும் தீர்மானத்தை, ஒன்றிய அரசு உடனடியாக ஏற்று ஆணை பிறப்பிக்க கழகம் தொடர்ந்து வலியுறுத்தும்." என வாக்குறுதி அளித்திருப்பதோடு, தொடர்ந்து முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் வலியுறுத்தி வருகிறார்.

எனவே, தமிழை வழக்காடு மொழியாக அறிவிக்க வேண்டுமென உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கும் வழக்கறிஞர்கள் தங்கள் உண்ணாவிரத அறப்போராட்டத்தை கைவிடக் கோரி, முதலமைச்சர், கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

### அனைத்துவகைப் பள்ளிகளிலும் - ஆறாம் வகுப்பில் சேரும் மாணவர்களுக்கு வங்கிக் கணக்கு!

# நால்வகைச் சான்றிதழ்கள் வழங்கும் திட்டம்!

## பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!

சென்னை, மார்ச் 6- தமிழ்நாட்டிலுள்ள அனைத்துவகைப் பள்ளிகளிலும் 2024- 2025 ஆம் கல்வியாண்டில் ஆறாம் வகுப்பில் சேரும் மாணவர்களுக்கு அவர்களது பள்ளியிலேயே புதியதாக வங்கிக்கணக்கு தொடங்கப்பட்டு, நால்வகைச் சான்றிதழ்கள் வழங்கப்படுமென பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

இந்து தொடர்பான அவரது அறிக்கை வருமாறு :

முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியால் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்தும் பொருட்டு பல்வேறு முன்னெடுப்புகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாணவர்களின் கற்றலில் எவ்விதத் தொய்வும் ஏற்படாவண்ணம் அவர்களுக்கான உதவித்தொகைகள் மற்றும் ஊக்கத்தொகைகள் அனைத்தும் தங்குதடையின்றி மாணவர்களைச் சென்றடையும் வண்ணம் "நேரடி பயனாளர் பரிவரித்தனை" (DBT) முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க இப்பணியினை எளிமைப்படுத்தும் விதத்தில் வரும் கல்வியாண்டில் (2024-2025) ஆறாம் வகுப்பில் சேரும் மாணவர்கள் அனைவருக்கும் பள்ளி மூலமாகவே வங்கிக்கணக்குகள் தொடங்கிடும் வசதி தற்போது உருவாக்கப்பட்டுள்ளது.



அத்தருணத்திலேயே ஆதார் புதுப்பித்தல் செய்யப்பட்டு ஆதார் பதிவினை வங்கிக் கணக்குடன் இணைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்படும். இதன்வாயிலாக பெற்றோர்கள் மற்றும் மாணவர்களின் சிரமம் பெருமளவில் குறைக்கப்படும்.

மேலும் பள்ளியில் பயிலும் மாணவர்கள் உதவித்தொகையினைப் பெறுவதற்கு விண்ணப்பிக்கும் போதும் பள்ளிப் படிப்பை முடித்து உயர் கல்வி பயில்வதற்கு விண்ணப்பிக்கும் நேர்விலும், வேலை வாய்ப்பிற்கு விண்ணப்பிக்கும் தருணத்திலும் சாதிச் சான்றிதழ், வருமானச்சான்றிதழ், இருப்பிடச்சான்றிதழ், முதல் தலைமுறை பட்டதாரியாக இருப்பின் அதற்குரிய சான்றிதழ் என நால்வகைச் சான்றிதழ்கள் அவசியமாகின்றன.

இந்நால்வகைச் சான்றிதழ்களைப் பெறுவதற்கு தற்போது அரசு இசேவை மையங்கள் வாயிலாக விண்ணப்பித்து தேவையான சான்றிதழ்களைப் பெற்றுவருகின்றனர்.

முதலமைச்சரின் வழிகாட்டுதலின்படி பெற்றோர்களுக்கும், மாணவர்களுக்கும் இதற்கான சிரமத்தைக் குறைத்திடும் வகையில், மாணவர்கள் படிக்கும் அந்தந்தப் பள்ளிகளிலேயே வரும் கல்வியாண்டில் (2024 -2025) ஆறாம் வகுப்பில் சேரும்போதே, தேவையான ஆவணங்களை பள்ளித்தலைமையாசிரியரிடம் சமர்ப்பிக்கும்போது அதன் விவரங்கள் கல்வி மேலாண்மைத் தகவல் முறைமை (EMIS) தளத்தில் உள்ளீடு செய்யப்பட்டு வருவாய்த்துறையினருக்கு அனுப்பிவைக்கப்படும்.

விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு (EMIS) தளத்தின் வாயிலாகவே பள்ளிகளுக்கு அனுப்பப்பட்டு உரிய மாணவர்கள் வசம் சான்றிதழ்கள் வழங்கப்படும். இந்த நல்வாய்ப்பினை அனைத்து மாணவர்களும் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவ்வறிக்கையில் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி குறிப்பிட்டுள்ளார்.

# உதகையில் நிதிநிலை அறிக்கை விளக்கக் கூட்டம்!

உதகை, மார்ச் 6– உதகை நகர தி.மு.க. சார்பில் ஏ.டி.சி. பகுதியில் "எல்லோருக்கும் எல்லாம்" திராவிட மாடல் நாயகர் தமிழக முதல்வர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 71 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா மற்றும் தமிழக நிதிநிலை அறிக்கை விளக்கப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

நகரச் செயலாளர் ஜார்ஜ் தலைமை வகித்தார்.

தலைமைச் செயற்குழு உறுப்பினர் இளங்கோவன் வரவேற்புரையாற்றினார்.

கழக செய்தி தொடர்பு இணைச் செயலாளர் பழ.சிவ.ஜெயராஜ். மாவட்டச் செயலாளர் முபாரக் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இதில் மாவட்ட துணைச் செயலாளர் ரவிகுமார், மாவட்டப் பொருளாளர் நாசர் அலி, ஒன்றியச் செயலாளர்கள் காமராஜ், பரமசிவன், பொதுக்குழு உறுப்பினர்கள் மோகன் குமார், துரை, இளைஞரணி சசிகுமார், நகரமன்றத் தலைவர் வாணீஸ்வரி உட்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நகர துணைச் செயலாளர் கார்டன் கிருஷ்ணன் நன்றி கூறினார்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் 71வது பிறந்தநாள் விழா மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம், தூத்துக்குடி வடக்கு மாவட்டம், விளாத்திகுளத்தில் உள்ள கலைஞர் திடலில் நடைபெற்றது. இதில், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், கழக நாடாளுமன்றக் குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். உடன் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளருமான கீதாஜீவன், விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன், திராவிட பேச்சாளர் நாஞ்சில் சம்பத், ஒன்றியச் செயலாளர்கள் மும்மூர்த்தி இராதாகிருஷ்ணன், நவநீதகண்ணன், சின்ன மாரிமுத்து, அன்பு, இராமசுப்பு மற்றும் கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த மாவட்ட நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.